# 13

# நீதிமான்களுக்கு வெகுமதி

*"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற் கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத் தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1 பேது. 1:3, 4).*

*"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (மத். 5:12; லூக். 6:23) என்பது இயேசு ஏற்படுத்திய உணர்வெழுச்சி மிகுந்த ஒரு வாக்குத் தத்தமாக உள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம், இந்த வாழ்வைவிட மகிமை யில் மிகவும் அதிகமான, கிறிஸ்தவர்களாய் இருப்பதைத் தகுதிப்படுத்து கிறதான ஒரு வாழ்வு பரலோகத்தில் உண்டு என்ற நம்பிக்கையைக் (எபே. 4:4) கொண்டுள்ளோம். வேறு எந்த மக்களும் பரலோகத்தைப் பற்றி இவ்வளவு அதிகமான பாடல்களைக் கொண்டிருப்பதோ அல்லது எதிர்கால இல்லம் பற்றி இவ்வளவு அடிக்கடி பாடுவதோ இல்லை. பரலோகத்தைப் பற்றிய நமது எதிர்பார்ப்பானது, வருத்தம் பெருந்துக்கம் ஆகியவற்றிற்கு மற்றவர்களைத் துரத்தும் பல சோதனைகள் மற்றும் பாரங்களினூடே சந்தோஷமாயிருக்கச் செய்து சுமந்து செல்லுகிறது (1 தெச. 4:13).*

*"கிறிஸ்தவ வாழ்வு என்பதற்கு மரணத்திற்குப் பின்பு ஒருவேளை பலன் கிடைக்காது என்றிருப்பினும் அது, மனிதன் இங்கிருக்கையில் வாழக்கூடிய மிகச்சிறந்த வாழ்வாகவே இன்னமும் உள்ளது" என்று யாரோ ஒருவர் முடிவு செய்துள்ளார். இதற்குக் கருத்தொருமைப்படும் வகையில் பவுல் "தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" என்று எழுதினார் (1 தீமோ. 4:8). இயேசுவும் இதையே போதித்தார்: "நானோ, அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவா. 10:10). பரிபூரண வாழ்வு என்பது பிரச்சனைகள் இல்லாததாக இருப்பதில்லை. பவுல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று எழுதினார் (2 தீமோ. 3:12). பவுல் சகித்திருந்த உபத்திரவங்கள் அவரை, "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை யுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம்" (1 கொரி. 15:19) என்று எழுதும்படி வழிநடத்தின. அவர் கிறிஸ்துவுக்காகப் பட்ட உபத்திரவம் பற்றி, "நான் எபேசுவிலே துஷ்ட மிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லு கிறேன். அப்படிப் போராடினதினாலே எனக்குப் பிரயோஜனமென்ன?*

*மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?" என்று எழுதினார் (1 கொரி. 15:32; ஏசா. 22:13ஐக் காணவும்).*

*இந்த வாழ்வைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கண்ணோக்கு வதற்குப் புதிய ஏற்பாடு நமக்கு மிகவும் அதிகமான விஷயங்களைத் தருகிறது. வேத வசனங்களில், பரலோகம் என்பது இரட்சிக்கப்பட்டவர் களின் நித்திய இல்லிடம் என்ற கருத்தமைவில் வேத வசனங்களில் குறிப் பிடப்படாதிருப்பினும் அல்லது விவரமாக விளக்கப்படாதிருப்பினும், பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் பலமுறை மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகின்றன.*

*பரலோகத்தில் நமக்கு ஒரு இல்லம் உண்டு என்ற கிறிஸ்தவ நம்பிக்கை தான் நமக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது (ரோமர் 12:12). இது பழைய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்தவர்களுக்குத் தரப்பட்டதைப் பார்க்கிலும் மேன்மையான வாக்குத்தத்தமாக உள்ளது (எபி. 8:6; 10:34). அவர்களுடன் தேவன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையை அவர்கள் கைக்கொண்டால், அவர்களுக்கு கானான் தேசமும், நீண்ட ஆயுளும், வளமையும் கிடைக்கும் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டது (உபா. 4:13; 5:33). நமக்கு இந்த பூமியில் ஒரு இடமானது அதன் தொடக்க நிலைக்கு மறுகட்டுமானம் செய்யப்பட்டு தரப்படும் என்று மட்டுமே வாக்குத்தத்தம் செய்யப் பட்டிருந்தால், அது தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த நாடு பற்றிய வாக்குத்தத்தத்தைக் காட்டிலும் மேன்மையானதாக இராது (உபா. 28:1-14). இருப்பினும், நமது நம்பிக்கை என்பது, பூமியில் வளமையும் நீண்ட ஆயுளும் உள்ள ஒரு நிலப் பகுதி என்பதற்குப் பதிலாக, பரலோகத்தில் என்றென்றைக்கும் இருக்கும் ஒரு இடம் என்பதாக உள்ளது (1 பேது. 1:3, 4).*

## ***பரலோகம் எதைப்போல் உள்ளது?***

*வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, பரலோகத்தைப் பற்றி நாம் புரிந்துகொள்வதற்கு, நாம் முன்பு ஒரு பாடத்தில் படித்தபடி, "பரலோகம்" ["வானம்"] என்பது மூன்று மாறுபட்ட வட்டாரங்களை குறிப்பிடப் பயன் படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும் (2 கொரி. 12:2-4): (1) மேகங்கள் உள்ள (உபா. 11:11), மற்றும் பறவைகள் பறக்கிற இடமான ஆகாயம் (சங். 79:2), (2) நட்சத்திரங்களும் வானவியல் கிரகங்களும் நிரப்பப்பட்டுள்ள அண்டம் (ஆதி. 1:14-18; உபா. 1:10), மற்றும் (3) பூமியிலிருந்து மீட்கப்பட்டவர்கள் என்றென்றும் வாழப்போகின்ற இடமான தேவனுடைய வாசஸ்தலம் (1 பேது. 1:3, 4). இந்தக் கடைசிக் குறிப்பைப் பற்றியே இப்பாடத்தில் கவனம் செலுத்தப்படுகிறது.*

*"பரலோக ராஜ்யம்" என்ற சொல்விளக்கமானது பின்வரும் மூன்று கருத்துக்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது: (1) தேவனுடைய நித்திய ராஜ்யம் (மத். 13:43), (2) இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டுள்ள ராஜ்யம் (மத். 25:34), மற்றும் (3) கிறிஸ்து, சமீபத்தில்*

இருந்ததென்று பிரசங்கித்ததும் மற்றவர்கள் பிரசங்கிக்கும்படி அவர் அனுப்பியதுமான கிறிஸ்துவின் ராஜ்யம். இந்த ராஜ்யமானது, பின்வரும் சொற்றொடர்களால் குறிப்பிடப்பட்டது: "பரலோக ராஜ்யம்" (மத். 4:17); "தேவனுடைய ராஜ்யம்" (மாற். 1:15), "என் ராஜ்யம்" (லூக். 22:30), மற்றும் ''தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யம்'' (கொலோ. 1:13). இந்தச் சொற்றொடர்களினூடே இவற்றை ஒருங்கிணைப்பதற்கு ஒரு ஒன்றிணைக்கும் நூலானது இழையோடுகிறது, ஏனெனில் இவைகள் ஒவ்வொன்றுமே பரலோகத்தின் ஆளுகையைக் குறிப்பிடுகின்றன. சமீபமாயிற்று (மத். 4:17) என்று கிறிஸ்து பிரசங்கித்ததான, கிறிஸ்துவின் விசேஷித்த ஆளுகையானது, அவர் பரத்துக்கேறிய பின்பு தொடங்கிற்று (எபே. 1:19-23), இது அவர் மறுபடியும் வரும்போது முடிவடையும் (1 கொரி. 15:24). இரட்சிக்கப்பட்டவர்கள் பிரவேசிக்கும் ராஜ்யமானது அவர்களின் நித்திய வெகுமதியாக இருக்கும் என்பதை இப்பாடம் வலியுறுத்தும் (மத். 25:34). ஒவ்வொரு வசனப்பகுதியிலும் இந்தச் சொற்றொடரின் பயன்பாடு எது என்பதைச் சந்தர்ப்பப் பொருள் மாத்திரமே தீர்மானிக்க முடியும்.

பரலோகம் என்பது தொட்டு உணரக்கூடிய, உலகம் சார்ந்த பரிமாணமாக இருப்பதில்லை என்பதால், இதை விவரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உலகம் சார்ந்த சொற்றொடர்கள் ஆவிக்குரிய வட்டாரத்தின் உண்மை நிலையைப் பற்றிச் சிறிய குறிப்பை மாத்திரமே தரமுடியும் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். இந்த வட்டாரத்தைப் பற்றிப் பவுல், ''மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ... ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என்று எழுதினார் (2 கொரி. 4:17, 18). தேவன் பூமிக்குரிய சொற்றொடர்களில் பரலோகத்தை விவரித்தாலும் அது உலகம் சார்ந்ததாக உள்ளது என்று நினைக்கப்படக்கூடாது.

இந்த பூமியானது ஆவிக்குரிய குடியிருப்பாகப் புதுப்பிக்கப்படவோ அல்லது மாற்றப்படவோ மாட்டாது. அப்படி நடக்குமென்றால், சிங்காசனத்தில் அமர்ந்து கொண்டு, "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி. 21:5) என்று கூறுபவரைப் பற்றி நாம் மும்முரமாகச் சிந்திக்க இயலாது. அல்லது, "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன், முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின ..." என்ற கூற்றை (வெளி. 21:1) நாம் நேரடிப் பொருளில் எடுத்துக்கொள்ள இயலாது.

இரட்சிக்கப்பட்டவர்களின் நகரமான புதிய எருசலேமானது, பூமியில் விலை உயர்ந்ததாக அறியப்பட்டுள்ள பொருட்களினால் ஏற்படுத்தப்பட்டதென்று விவரிக்கப்படுகிறது (வெளி. 21:11-21). இப்படிப்பட்ட ஒரு விவரிப்பானது அச்சமுள்ளதாக, ஏறக்குறைய மனித கற்பனைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. இதுதான் அழிந்துபோகின்ற நாம் பெறும்படிக்குத் தேவன் விரும்புகின்ற சித்தரிப்பாக உள்ளது. நாம் அவரது ராஜ்யத்தில் மகிமைப்படும்போது (1 தெச. 2:12; எபி. 2:10), அதன் கெம்பீரத்தையும் மகிமையையும் பற்றிக்கொள்ளும்போது (ரோமர் 8:18),

அந்த மகிமைக்குப் பங்குள்ளவர்கள் ஆகும்போது (1 பேது. 5:1) நாம் யாவரும் பிரமித்து நிற்போம். அவர் “தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராக” இருப்பார் (2 தெச. 1:9). இது கடந்துபோகும் வட்டாரம் அல்ல, ஆனால் பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில் நமக்கு, “மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது” (2 கொரி. 4:17) என்ற மனப்பதிவைக் கொண்டிருப்போம். பூமியோடு ஒப்பிடுகையில் இது, “அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்திரம்” (எபி. 10:34) என்பதாகவும், “மேன்மையான பரமதேசம்” (எபி. 11:16) என்பதாகவும் உள்ளது.

பரலோகமானது எப்போதும் இருக்கும் மற்றும் அது எப்போதும் ஒரே மாதிரியாகவே இருக்கும் என்பது அதைப் பற்றிய நற்செய்தியாக உள்ளது. அது மாறுகிற இந்த பூமிபோல் இராது. நமது நம்பிக்கையானது, “அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ... பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது” (1 பேது. 1:4, 5). பரலோகம் என்பது, “அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை” (மத். 6:20; லூக். 12:33) என்ற வகையிலான இடமாக உள்ளது. பரலோகத்திற்குள் பிரவேசிக்கின்ற ஒவ்வொருவரும் “தேவனால் கட்டப்பட்ட கை வேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று” (2 கொரி. 5:1) கூறப்படும் வகையிலான புதிய சரீரம் ஒன்றைப் பெறுவார்கள்.

தேவன், இயேசு, பரிசுத்த ஆவியானவர் (வெளி. 21:3), மற்றும் வாழ்ந் திருந்தவர்களில் இரட்சிக்கப்பட்ட அற்புதமான மக்கள் ஆகிய அனைவரு டனும் நித்தியத்திற்கும் நமது இணைவு இருக்கும் என்பது பரலோகத்தின் மிகவும் விசேஷித்த அம்சமாக உள்ளது. நாம் பரலோகத்தில் கொண்டிருக்கப் போகின்ற நித்திய ஐக்கியத்துடன், பூமியில் உள்ள எந்த ஒரு ஐக்கியமும் ஒப்பிடப்பட முடியாது.

பரலோகத்தில் உள்ள மகிமையை நாம் ஒரு கணம் கண்ணோக்க முடிந்து, நாம் அனுபவிக்கவிருக்கின்ற ஐக்கியத்தைக் காணக்கூடும் என்றால், நாம் அங்கு செல்வதைப் பற்றி உணர்வெழுச்சி அடைந்தவர்களாக, அதைப் பற்றிக் கனவு காணவும், அதை நோக்கி ஊழியம் செய்யவும், அதற்காகத் திட்டமிடவும் நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணத்தையும் செலவிடு வோம். பவுல், “ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப் படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்” என்று எழுதினார் (ரோமர் 8:18).

## பரலோகத்தில் என்ன இருக்கும்?

நாம் பரலோகத்தைப் பற்றிப் புரிந்துகொள்ள உதவுவதற்கு அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சூரியன், சந்திரன், அல்லது விளக்கு போன்று, இங்கு பூமியில் நமக்குத் தேவைப்படுகிற பொருட்கள் பரலோகத்தில் இராது; அங்கு இரவு வேளையும் இராது, ஏனெனில் ஆட்டுக்குட்டியானவர் அங்கு வெளிச்சமாக இருப்பார் (வெளி. 21:23, 25;

*22:5). தேவனிடம் சென்று சேர நமக்கு வழி தயாராக இருக்கும் என்பது, ஒரு ஆலயம் தேவைப்படாது, ஏனெனில் தேவனும் ஆட்டுக்குட்டி யானவருமே அங்கு ஆலயமாக இருப்பார்கள் என்று அர்த்தப்படுத்தும் (வெளி. 21:22).*

*நமக்கு சரீரப்பிரகாரமான உணவு தேவைப்படாது, ஏனெனில் ஜீவ நதியின் தண்ணீராலும் ஜீவ விருட்சத்தின் கனியினாலும் ஜீவனானது நிலைநிறுத்தப்படும் (வெளி. 22:1, 2). நாம் இனியும் தேவனிடத்திலிருந்து தூரமாய் இருக்க மாட்டோம், ஏனெனில் ''அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார், அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனா யிருப்பார்'' (வெளி. 21:3). தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும், அதனால் இனி ஒரு சாபமுமிராது (வெளி. 22:3). நமது புதிய வாசஸ்தலத்தில் நீதி மாத்திரம் வாசமாயிருக்கும் (2 பேது. 3:13).*

## *நாம் எப்படி இருப்போம்?*

*நமது உலகப்பிரகாரமான உடல்கள், ஆவிக்குரிய உடல்களாக மாற்றப் படும் (1 கொரி. 15:44, 51-54). நாம் பிரவேசிக்கவிருக்கும் ஆவிக்குரிய பரிமாணத்திற்கு உலகப்பிரகாரமான உடல்கள் தகுதியற்றவைகளாக இருக்கும், ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது" (1 கொரி. 15:50). தேவன் ஆவியாயிருப்பதால் (யோவா. 4:24) அவருக்கும், தூதர்களும் ஆவிகளாக இருப்பதால் (எபி. 1:14) அவர்களுக்கும், தேவனுடைய ஆவிக்குரிய வட்டாரம் இயல்பானதாக உள்ளது. அந்தப் பரிமாணத்தில் உள்ள உடல் எதுபோல் இருக்கும் என்பதை நாம் இப்போது புரிந்துகொள்ள இயலாது, ஆனால் "அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவா. 3:2) என்ற உறுதிப்பாட்டை நாம் பெற்றிருக்கின்றோம். நாம் தேவனைக் காண்பதற்கு, அவரது பரிமாணத்திற்குள் நாம் பிரவேசிக்க வேண்டும், ஏனெனில் உலக ரீதியான ஜீவிகள் தேவனைக் காண இயலாது (1 தீமோ. 6:16). இயேசு, "எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப் படுத்துவார்'' (பிலி. 3:21). இது நடைபெறும்போது, நாம் "அவருடைய சமூகத்தை'' தரிசிப்போம் (வெளி. 22:4), அது நம்மில் எவரும் நமது உலகப்பிரகாரமான இந்த சரீரத்தில் இருக்கும்போது கண்டு பின்பு உயிருடன் இருக்க முடியாத முகமாக உள்ளது (யாத். 33:20).*

*நாம் மாற்றப்பட்டிருக்கும்போது, பரலோக ஜீவிகளின் மகிமையை நாம் பெற்றிருப்போம். நாம் கிறிஸ்துவுடன் "மகிமைப்படுவோம்" (ரோமர் 8:17), மகிமை, கனம் மற்றும் சமாதானம் ஆகியவற்றினுள் பிரவேசிப்போம் (ரோமர் 2:7, 10). நமது புதிய நிலையில் நாம், "பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்(போம்)" (மத். 13:43). "மேலும் மண்ணான*

*வனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்" (1 கொரி. 15:49).*

*நாம் "நித்திய ஜீவன்" கொண்ட நித்திய ஜீவிகளாக, இனியும் மரிக்க இயலாதவர்களாக இருப்போம் (லூக். 20:36; வெளி. 21:4). "நித்திய ஜீவன்" என்பது ஜீவனின் தரத்தையும், ஜீவனின் கால அளவையும் இப்போதைய உடைமையையும்[1] அல்லது இயேசுவை விசுவாசித்து அவரைச் சேவிப்பதினால் நாம் பெற்றுக்கொள்ளும் ஜீவனையும் குறிப்பிடக்கூடும்.[2]*

*நீதியற்றவர்களாயிருந்து மரித்தவர்கள் தொடர்ந்து ஜீவிப்பார்கள். இருப்பினும், அவர்கள் நித்தியத்திற்கும் இருத்தல் என்பது "நித்திய ஜீவன்" என்பதாகக் கருதப்படக் கூடாது; மாறாக, அது "நித்திய மரணம்" என்று அழைக்கப்பட வேண்டும், இது அக்கினிக்கடலில் பங்கடைகின்ற இரண்டாம் மரணமாக உள்ளது (வெளி. 20:14).*

## *நாம் என்ன செய்து கொண்டிருப்போம்?*

*பரலோகத்தில் நாம் என்ன செய்து கொண்டிருப்போம் என்பது பற்றி, தேவன் நமக்கு ஒரு முழுமையான விவரிப்பைக் கொடுத்திருக்கவில்லை, இது ஒரு நல்ல காரணத்திற்கானதாக இருக்கலாம். நாம் உலகத்திற்குரிய உடல்ரீதியானவர்களாய் இருப்பதால், ஆவிக்குரிய ஜீவிகள் தாங்கள் என்ன செய்கின்றனர் என்பதை நாம் ஆழ்ந்து சிந்தியாது இருப்பது மிகவும் உணர்வெழுச்சியுள்ளதாய் இருக்க வேண்டும். நான் ஒரு சிறுவனாக இருக்கையில், வயது வந்தவர்களின் நடவடிக்கைகள் சலிப்பூட்டுபவைகளாயிருந்தன என்று நாம் நினைத்தபடியால், நான் ஒருக்காலும் வயது வந்தவனாக வளரமாட்டேன் என்று நம்பிக்கொண்டிருந்தேன். நமது மகிழ்ச்சி என்பது வழக்கமாக உலகம் சார்ந்த பொருட்களின்/விஷயங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதால், நாம் பரலோகத்தின் ஆவிக்குரிய செயல்பாடுகள் பற்றி உணர்வெழுச்சியடைவதில் சிரமம் கொண்டிருக்கலாம்.*

*பரலோகத்தில் நாம் சந்தோஷத்தை மாத்திரம் அறிந்திருப்போம், ஏனெனில் தேவன் ''அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின'' (வெளி. 21:4). இவ்வாழ்க்கையில் நாம் வருத்தப்படக் காரணமாயிருந்த அல்லது நமக்கு சாபமாயிருந்த, உலகம் சார்ந்த அம்சங்கள் யாவையும் இனியும் இருப்பதில்லை (வெளி. 22:3). இரட்சிக்கப்பட்டவர்கள் நமது எஜமானரின் சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள் (மத். 25:21, 23). நாம் இந்த வாழ்வின் கடின உழைப்பில் இருந்து இளைப்பாறுதல் பெறுவோம் (வெளி. 14:13; எபி. 4:8-11).*

*நித்தியம் முழுமைக்கும் நாம் அகமகிழ்வுடன் இருப்போம், ஏனென்றால் நாம் பிதாவுடனும் (வெளி. 21:3), இயேசுவுடனும் (யோவா. 12:26[3]), தூதர்களுடனும் (லூக். 9:26), மற்றும் இரட்சிக்கப்பட்ட யாவருடனும் (மத். 13:43) இருப்போம். நாம் மகிழ்வுடன் இயேசுவை சேவித்து (வெளி. 22:3) அவருடன் என்றென்றைக்கும் அரசாளுவோம்*

*(2 தீமோ. 2:12; வெளி. 22:5). அவர் பரிசுத்தவான்களில் மகிமைப்படுவார் (2 தெச. 1:10), இது இரட்சிக்கப்பட்டவர்களால், இயேசு மிக உயர்வாகக் கனப்பட்டும் பயபக்தி செலுத்தப்பட்டும் இருப்பார் என்று அர்த்தப்பட வேண்டும் (பிலி. 2:10, 11). பரலோகம் என்பது அன்பு, ஐக்கியம் மற்றும் அகமகிழ்வு என்பவற்றின் ஆச்சரியம் நிறைந்த இடமாக இருக்கும்.*

## யாரெல்லாம் பரலோகம் செல்லுவார்கள்?

*இயேசு, ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: 'கர்த்தாவே! கர்த்தாவே!' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப் பதில்லை'' என்று கூறினார் (மத். 7:21). "[அவர்] தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராக" ஆனார் (எபி. 5:9). "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களும்" (ரோமர் 2:7), "எவன் நன்மை செய்கிறானோ அவனும்'' (ரோமர் 2:10) நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.*

*பரலோகத்தின் மகிமைகள் தகுதியின் அடிப்படையில் அல்ல, ஆனால் கிருபையின் அடிப்படையில் தரப்படுகின்றன (2 தெச. 2:16). நாம் நமது நற்செயல்களினால் பரலோகத்தை ஈட்டிக் கொண்டதாகப் பெருமை பேசிக் கொள்ள முடியாது (எபே. 2:8, 9; தீத்து 3:5). நாம், "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்" (லூக். 17:10) என்று மட்டுமே கூறமுடியும்.*

*பரலோகம் நமக்கு ஒரு சுதந்தரமாகக் கொடுக்கப்படும்.[4] சுதந்தரம் என்பது ஈட்டப்படுவதில்லை; அது ஒரு கொடையாக உள்ளது. தேவனுடைய சுதந்தரர்களாக இருப்பவர்கள் அவரது பிள்ளைகளாக இருக்கின்றனர் (ரோமர் 8:16, 17; கலா. 3:6, 7, 29). நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடி பிறப்பதன் மூலம் (யோவா. 3:5), நாம் தேவனால் பிறந்தவர்களாய் இருக்கின்றோம் (யோவா. 1:12, 13). இவ்வாறு நாம் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக, தேவனுடைய பிள்ளைகளாகவும் பரலோகத்திற்குச் சுதந்தரர்களாகவும் ஆகின்றோம் (கலா. 3:26, 27).*

*தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்பவர்கள் பரலோகத்தினுள் பிரவேசிக்க மாட்டார்கள் (1 கொரி. 6:9, 10; கலா. 5:19-21). அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படாதபடியால், அவர்கள் அசுத்தராய் இருப்பார்கள், அவர்களால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது (வெளி. 21:27; 2 பேது. 3:13). இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டவர்கள்தான் பரலோகத்திற்குள் பிரவேசிப்பார்கள் (எபே. 5:25-27; கொலோ. 1:19-22).*

## எல்லாருக்கும் ஒரே விதமான பலன் அளிக்கப்படுமா?

தேவன் பல்வேறு அளவுகளில் பலன் அளிப்பார் என்று சிலர் முடிவு செய்துள்ளனர். சிலர், மூன்று விதமான கிரீடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்ற உண்மையின் அடிப்படையில், இந்த முடிவை மேற்கொள்ளுகின்றனர்: "நீதியின்" கிரீடம் (2 தீமோ. 4:8), "மகிமையுள்ள" கிரீடம் (1 பேது. 5:4) மற்றும் "ஜீவ" கிரீடம் (வெளி. 2:10; யாக். 1:12). இவைகள் பலன்களின் [பல்வேறு] அளவுகளாயிராமல், நீதிமான்கள் யாவருக்கும் தரப்படும் ஆசீர்வாதங்களின் விவரிப்புகளாக இருக்கலாம்.

எல்லாரும் ஒரே விதமான பலன்களைப் பெறுவார்கள் என்பதற்கு ஒரு நல்ல விஷயத்தை மேற்கோள் காண்பிக்க முடியும். ஒருமணி நேரம் முதல் நாள் முழுவதும் வரை என்ற பல்வேறு கால அளவுகள் வேலை செய்திருந்த யாவருக்கும் ஒரே விதமான பலன் [கூலி] கொடுக்கப்பட்டது பற்றிய உவமையில், அவர்கள் யாவரும் ஒரே அளவான கூலியைப் பெற்றுக் கொண்டதாக இயேசு உரைத்தார் (மத். 20:2-15). மேலும் அவர், எல்லாவற்றையும் விட்டுவிட்டவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள் என்றும் போதித்தார் (லூக். 18:29, 30), ஆனால் அவர், மாபெரும் பலன்கள் பற்றி ஏதொன்றும் கூறவில்லை. சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் பலன் அளிப்பதில் தேவன் நீதியாகவே இருப்பார்; ஆயினும், எவரொருவரும் பரலோகத்திற்குப் பாத்திரராக இருக்கமாட்டார்கள். உவமையில் சுட்டிக்காண்பித்தது போல் (மத். 20:2-15), நாம் யாவருக்கும் தேவன் ஒரே விதமான பலனைக் கொடுக்கின்றார் என்றால், அவர் அப்போதும் தமது கிருபையை எல்லாருக்கும் காண்பிப்பவராகவே இருப்பார்.

## நாம் ஒருவரை ஒருவர்அடையாளம் காண்போமா?

நாம் அன்புகூர்ந்த சிலர் பரலோகத்தைப் பெற்றுக்கொள்ளாதிருக்கப் போவதால், பரலோகத்தில் நாம் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொண்டால், அங்கு நாம் துக்கம் அடைவோம் என்று சிலர் வாதிட்டுள்ளனர். இது ஒரு பிரச்சனையாக இருக்க முடியும்; இருப்பினும், நம்மில் பரலோகத்திற்குச் செல்லுகின்ற யாவரும் தேவனைப் போன்றே அவருடைய நீதியைப் புரிந்துகொண்டிருப்போம். இந்தக் காரணத்தினால், அவர் என்ன தீர்ப்புக் கொடுத்தாலும் அதில் நாம் மகிழ்வுடன் இருப்போம்.

மற்றவர்கள், நமது ஆவிக்குரிய உடல்களானவை நமது உலகப்பிரகாரமான உடல்கள் போல் காணப்படாது என்பதால், நாம் ஒருவர் மற்றவரை அடையாளம் காணமாட்டோம் என்று முடிவு செய்துள்ளனர். ஐசுவரியவானும் லாசருவும் தங்கள் உடல்களில் இருந்து பிரிந்து சென்ற பின்பு, லாசரு ஆபிரகாமின் மடியில் இருந்ததை ஐசுவரியவான் அடையாளம் கண்டுகொண்டான். பவுல், கிறிஸ்துவின் வருகையின் நாளில் தெசலோனிக்கேயில் இருந்த சகோதரர்கள் தமது சந்தோஷம் மற்றும் மகிமை

ஆகியவற்றிற்குக் காரணமாக இருப்பார்கள் என்று கூறினார் (1 தெச. 2:19, 20). அவர்களை அவர் அடையாளம் கண்டுகொள்ளவும், இரட்சிக்கப் பட்டவர்கள் மத்தியில் அவர்கள் இருக்கின்றனர் என்று அறிந்து கொள்ளவும் அவரால் முடியாதிருந்தால், அவர்கள் எப்படி அவரது சந்தோஷத்திற்குக் காரணமாக இருக்க முடியும்? பரலோகத்தில் நீதிமான்கள், பூமியில் தாங்கள் கொண்டிருந்த நண்பர்களில் இரட்சிக்கப்பட்டவர்களுடனும் மற்றும் பூமியிலிருந்து இரட்சிக்கப்பட்ட யாவருடனும் நித்தியத்திற்கும் ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

## முடிவுரை

பரலோகம் என்பது மிகவும் வளமையான நமது கனவுகளைக் காட்டிலும் அதிகம் ஆச்சரியம் நிறைந்த இடமாக உள்ளது. இயேசு இருக்கின்ற அந்த ஆவிக்குரிய வட்டாரத்திற்குள் பிரவேசித்தல் என்பது நமது மாபெரும் இலட்சியமாக இருக்க வேண்டும். ஆச்சரியமான ஐக்கியம் உள்ள பரலோகத்தில் நாம், நித்தியம் முழுமைக்கும் ஆவிக்குரிய வகையில் ஒரு புதிய இருத்தலை மகிழ்வுடன் அனுபவிப்போம். அங்கு இனியும் வேதனை, வருத்தம், அல்லது அலறுதல் இருக்காது. எல்லாமுமே சந்தோஷம், மகிழ்ச்சி மற்றும் சமாதானம் ஆகியவையாக மாத்திரம் இருக்கும்.

குறிப்புகள்

[1]யோவா. 3:36; 5:24; 6:47, 54; 1 யோவா. 5:11, 13 ஆகிய வசனங்களைக் காணவும். [2]மத். 19:29; மாற். 10:30; லூக். 18:30; யோவா. 10:28; ரோமர் 2:7; 6:22; 1 தீமோ. 6:12. [3]யோவா. 14:3; 17:24; 2 கொரி. 5:6-8; பிலி. 1:23; கொலோ. 3:4; 1 தெச. 4:17 ஆகிய வசனங்களைக் காணவும். [4]அப். 20:32; 26:18; எபே. 1:11, 14, 18; 5:5; கொலோ. 1:12; 3:24; எபி. 9:15; 1 பேது. 1:4 ஆகிய வசனங்களைக் காணவும்.

# வெளிப்படுத்தின விசேஷத்தில் 144,000 பேர்

*144,000 பேர் மாத்திரமே இயேசுவுடன் அரசாளும்படி பரலோகம் செல்லுவார்கள் மற்றும் மீட்கப்பட்ட எஞ்சியுள்ள யாவரும் பூமியின் பரதீசில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பது உண்மையா?* வெளிப் படுத்தின விசேஷம் புத்தகத்தின் உயர்வான அடையாளத்துவ மொழி நடையைச் சிலர் நேர்ப்பொருளில் எடுத்தாள்வதால், அவர்கள் "144,000" என்பது பரலோகம் செல்லவிருக்கின்ற நபர்களின் நேர்ப்பொருளான எண்ணிக்கையாக இருப்பதாக நம்புகின்றனர். இருப்பினும் இந்த நேர்ப் பொருளான முடிவானது பின்வரும் பிரச்சனைகளை முன்வைக்கிறது:

(1) 144,000 பேர்கள் யாவரும் தனித்தனியே பட்டியலிடப்பட்ட

*இஸ்ரவேல் கோத்திரங்களில் இருந்து வந்தவர்களாக இருந்தனர், இவர்களில் தாண் கோத்திரத்தார் மாத்திரம் பட்டியலிடப்படவில்லை (வெளி. 7:4-8). அது புறஜாதியார் எவரும் பரலோகம் செல்லமாட்டார்கள் என்று அர்த்தப் படுத்தவதாயிருக்கும்.*

*(2) ஒருவராலும் எண்ணி முடியாத மக்கள் திரள் ஒன்று சிங்காசனத்தின் முன்பு நிற்பதாக விவரிக்கப்பட்டுள்ளது (வெளி. 7:9). இந்த சிங்காசனம் பரலோகத்தில் உள்ளது,[1] இது, இந்த மக்கள் திரளும் பரலோகத்தில் இருக்கும் 144,000 பேர் மாத்திரம் அல்ல, என்று அர்த்தப்படுகிறது.*

*(3) ஒரே ஒரு நம்பிக்கை (எபே. 4:4), வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரலோகம் (கொலோ. 1:5; 1 பேது. 1:3, 4) என்ற ஒரே சுதந்தரம் மாத்திரமே உள்ளது. சிலருடைய நம்பிக்கையின்படியான பூமியும், மற்றவர்களுடைய நம்பிக்கையின்படியான பரலோகமும், ஒரே நம்பிக்கையாக இராமல், இரண்டு நம்பிக்கைகளாக இருக்கும்.*

*(4) பரலோகமே கிறிஸ்தவர்களின் குடியிருப்பாக உள்ளது (பிலி. 3:20). நாம் பரலோகத்திற்குப் புறம்பே இருக்கும் வரையிலும், அந்நியரும் பரதேசிகளுமாய் இருக்கின்றோம் (1 பேது. 2:11). நாம் நமது குடியிருப்பு உரிமையைக் கொண்டுள்ள இடத்தில் இருக்கும்போது மாத்திரமே நமது இல்லத்தில் இருப்பவர்களாகின்றோம். ஆகையால் பூமியல்ல, பரலோகமே எல்லா கிறிஸ்தவர்களுக்கும் நித்திய இல்லமாக இருக்க வேண்டும்.*

*(5) இயேசு இருக்கும் இடத்தில் நாமும் இருக்கும்படிக்கு, நமக்கு ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணுவதற்காக இயேசு சென்றிருக்கின்றார் (யோவா. 14:3). அவர் பரலோகம் சென்றார் (1 பேது. 3:22), எனவே பரலோகமே நாம் செல்லும் இடமாகவும் இருக்க வேண்டும்.*

*(6) காணக்கூடிய வட்டாரத்தில் உள்ள இந்த பூமியானது அநித்திய மானது, இது நித்தியமானது அல்ல (2 கொரி. 4:18); ஆகையால், இது அழிந்துபோகும் (மத். 24:35). எரிக்கப்படவிருக்கும் இந்த பூமியானது (2 பேது. 3:10) நமது நித்திய இல்லமாயிருக்க முடியாது.*

*(7) நமது நித்திய வீடு பரலோகத்தில் உள்ளது (2 கொரி. 5:1).*

*144,000 பேர் என்பது இயேசுவின் சபையினுடைய அடையாளமாக இருக்கலாம், ஏனெனில் அவர்களைப் பற்றிக் கூறப்பட்ட ஒவ்வொரு விஷயமும் சபையைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. உண்மையில் சபை யானது இதைக்காட்டிலும் மேன்மையாக விவரிக்கப்பட இயலாது.*

| *144,000 பேர்* | *விவரிப்பு* | *சபை* |
|---|---|---|
| *வெளி. 7:3* | *தேவனுடைய ஊழியக்காரர்கள்* | *1 பேது. 2:16* |
| *வெளி. 7:4* | *முத்திரையிடப்பட்டவர்கள்* | *2 கொரி. 1:22; எபே. 1:13; 4:30* |
| *வெளி. 7:4* | *தேவனுடைய இஸ்ரவேலர்கள்* | *கலா. 6:16* |
| *வெளி. 14:1* | *சீயோன் மலையின்மேல்* | *எபி. 12:22, 23* |

| | | |
|---|---|---|
| *வெளி. 14:1* | *பிதாவின் நாமந் தரித்தவர்கள்* | *எபே. 3:15; வெளி. 3:12* |
| *வெளி. 14:1* | *இயேசுவின் நாமந் தரித்தவர்கள்* | *யாக். 2:7; அப். 11:26* |
| *வெளி. 14:3* | *கிரயங் கொள்ளப்பட்டவர்கள்* | *அப். 20:28* |
| *வெளி. 14:4* | *தீட்டுப்படாதவர்கள்* | *எபே. 5:27* |
| *வெளி. 14:4* | *கன்னிகைகள்* | *2 கொரி. 11:2* |
| *வெளி. 14:4* | *ஆட்டுக்குட்டியானவரைப் பின்செல்பவர்கள்* | *யோவா. 10:27; 1 பேது. 2:21* |
| *வெளி. 14:4* | *முதற் பலன்கள்* | *எபி. 12:23; யாக். 1:18* |
| *வெளி. 14:5* | *தங்கள் வாயில் கபடம் இல்லாதவர்கள்* | |

*"ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்" (வெளி. 7:9-17) என்பது எல்லாக் காலங்களிலும் மீட்கப்பட்டு ஏற்கனவே இந்த ஜீவனிலிருந்து பிரிந்து சென்றவர்களைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். இந்தத் திரள் கூட்டமாகிய ஜனங்கள், புதிய எருசலேமிற்குள் பிரவேசிக்கின்றவர்களை விவரித்த அதே வகையில் விவரிக்கப்படுகின்றனர்: (1) அவர்கள் சகல இனங்களில் இருந்தும் வந்தவர்களாய் உள்ளனர் (7:9; 21:24); (2) அவர்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்துள்ளனர் (7:9; 19:14); (3) அவர்கள் ஆட்டுக்குட்டியானவருடன் உள்ளனர் (7:9; 21:22; 22:1); (4) அவர்கள் சிங்காசனம் இருக்கும் இடத்தில் உள்ளனர் (7:9; 22:3); (5) அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாய் உள்ளனர் (7:10; 21:27); (6) அவர்கள் தங்கள் அங்கிகளைத் தோய்த்திருந்தனர் (7:14; 19:8; 22:14); (7) அவர்கள் அவரைச் சேவிக்கின்றனர் (7:15; 21:3); (8) அவர்கள் தேவனுடைய ஆலயத்தில் இருப்பார்கள், தேவன் தாமே இந்த ஆலயமாக இருப்பார் (7:15; 21:22); (9) தேவன் அவர்களோடே வாசம்பண்ணுவார் (7:15; 21:3); (10) அவர்கள் பசியடைய மாட்டார்கள் (7:16; 22:2); (11) அவர்கள் தாகமடைய மாட்டார்கள் (7:16; 21:6; 22:1); (12) அவர்களுக்கு சூரியன் தேவைப்படாது (7:16; 21:23; 22:5); (13) அவர்கள் ஜீவதண்ணீரைக் கொண்டிருப்பார்கள் (7:17; 21:6); மற்றும் (14) தேவன் அவர்களுடைய கண்ணீர்கள் யாவையும் துடைப்பார் (7:17; 21:4).*

*நேர்ப் பொருளில் 144,000 பேர் அல்ல, ஆனால், இயேசுவுக்குக் கீழ்ப்படிகின்ற யாவருமே நித்தியம் முழுவதற்கும் பரலோகத்தின் மகிமைகளினுடைய ஒரே நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றோம். சபை என்ற இரட்சிக்கப்பட்ட யாவரும் (எபே. 5:25-27), மற்றும் பூமியில் இரட்சிக்கப்பட்ட யாவரும் நமது ஒரே ஒரு நம்பிக்கையான பரலோகத்தில் நித்திய ஜீவனை வெகுமதியாகப் பெறுவோம்.*

---

குறிப்பு

[1]*வெளி. 1:4; 3:21; 4:2-10; 5:1, 6-13; 6:16; 7:9-17; 8:3; 12:5; 14:3; 16:17; 19:4, 5.*